இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 27-05-2023

# குடியரசுக்கே அவமானம் அல்லவா?

1949 நவம்பர் 25ஆம் நாள் இந்திய அரசமைப்பு அவையில் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் இறுதி உரையாற்றினார். அப்போது குறிப்பிட்டார்:

**"இந்த அரசமைப்புச் சட்டத்தின் தகுதிகளைப் பற்றிச் சொல்வதற்கு நான் இப்போது முனைய மாட்டேன். ஓர் அரசமைப்புச் சட்டம் எவ்வளவு நல்லதாக இருந்தாலும் அதைச் செயல்படுத்த அழைக்கப்பட்டவர்கள் மோசமானவர்களாக இருந்தால், அதன் விளைவு மோசமானதாகவே இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதேபோல ஓர் அரசமைப்புச் சட்டம் மோசமானதாக இருந்தாலும், அதைச் செயல்படுத்த அழைக்கப்பட்டவர்கள் நல்லவர்களாக இருப்பின் நன்மையே விளையும்.**

**ஒரு அரசமைப்புச் சட்டம் செயல்படுவது அதன் தன்மையை மட்டுமே முழுமையாகச் சார்ந்திருப்பதில்லை. அரசமைப்புச் சட்டத்தால் அரசின் அங்கங்களான சட்டமன்றம், நிர்வாக அமைப்பு, நீதித்துறை ஆகியன போன்றவற்றை மட்டுமே வழங்க முடியும். அரசின் அங்கங்களான இவை செயல்படுவதற்கான காரணிகளாக இருப்பவர்கள் மக்களும், அவர்களின் விருப்பங்களையும் அரசியலையும் நிறைவேற்றும் கருவிகளாக அவர்களால் உருவாக்கப்படும் அரசியல் கட்சிகளும் ஆகும். இந்திய மக்களும் அவர்களது கட்சிகளும் எவ்வாறு நடந்து கொள்வர் என்பதை யாரால் சொல்ல இயலும்? - எனவே மக்களும் அவர்களின் அரசியல் கட்சிகளும் வகிக்கும் பாத்திரத்தைக் குறிப்பிடாமல் அரசமைப்புச் சட்டத்தின் மீது எந்தத் தீர்ப்பையும் வழங்குவது வீண் செயல்"**

என்று குறிப்பிட்டார் அண்ணல் அம்பேத்கர் அவர்கள்.

இன்னொரு கவலையும் தனக்கு இருப்பதாக அம்பேத்கர் அவர்கள் அப்போதே சொன்னார்கள். **"1950 ஜனவரி 26ஆம் நாளில் இருந்து இந்தியா ஜனநாயக நாடாக இருக்கும். ஆனால் அதனுடைய ஜனநாயக அரசமைப்பைப் பாதுகாக்க இயலக்கூடியதாக இருக்குமா அல்லது அதனை மீண்டும் இழந்துவிடுமா என்பது என்னைக் கவலையுறச் செய்கிறது. முன்பு ஒரு முறை இந்தியா ஜனநாயகத் தன்மையை இழந்தது. இரண்டாவது முறையும் ஜனநாயக முறையை இழந்துவிடுமா? எனக்குத் தெரியவில்லை. புதிதாகப் பிறந்துள்ள இந்த ஜனநாயகம் தன் வடிவத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் அதே வேளையில், உண்மையில் சர்வாதிகாரத்துக்கு வழிவிடுவது முற்றிலும் சாத்தியமானதுதான். ஒரு நிலச்சரிவு ஏற்படுமோனால், இரண்டாவது சாத்தியப்பாடு உண்மையானதாகிவிடும் அபாயம் மேலும் பெரிதாக இருக்கும்"** என்று அச்சம் தெரிவித்தார் அண்ணல் அம்பேத்கர் அவர்கள்.

அத்தகைய நிலச்சரிவு நிலையைத்தான் பா.ஜ.க. ஆட்சி நம் கண்ணுக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறது. 'ஒற்றை' பிம்பத்துக்குள் அனைத்தையும் அடைக்கப் பார்க்கிறது.

பா.ஜ.க. ஒரே நாடு - ஒரே மதம் - ஒரே மொழி - ஒரே கலாச்சாரம் - ஒரே பண்பாடு - ஒரே நாகரிகம் - ஒரே தேர்தல் - ஒரே தேர்வு - என்பதெல்லாம் ஒரே கட்சியின் ஆட்சியையே நிலைநாட்டும். பின்னர், அது ஒரே ஆள் ஆட்சியாகவே முடியும். அதனை உருவாக்கவே பார்க்கிறார்கள். பா.ஜ.க.வின் ஒற்றைத் தன்மை என்பது ஒற்றை மோடியின் அரங்கேற்றமாக மாறும் காட்சியாகவே நாடாளுமன்றக் கட்டடம் திறப்பு விழா என்பது அமைந்துள்ளது.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் தலைவரான குடியரசுத் தலைவரை அழைக்காமல் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தின் திறப்பு விழா நடைபெற இருக்கிறது.

நாடாளுமன்றத்தின் புதிய கட்டடத்தை மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா அவர்கள் தலைமையில் மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு குடியரசு நாட்டின் நாடாளுமன்றத்தைத் திறந்து வைக்கும் - அல்லது அந்த நிகழ்ச்சிக்குத் தலைமை வகிக்கும் தகுதியை அந்த நாட்டின் குடியரசுத் தலைவர் இழந்துவிட்டாரா?

**குடியரசுத் தலைவர் பதவியே தகுதியற்றதாக ஆகிவிட்டதா? பழங்குடி சமூகத்தில் பிறந்தவர் என்பதால் அவமானம் செய்கிறார்களா? பெண் என்பதால் அவமானப்படுத்தப்படுகிறாரா?** அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு எண் 79, நாடாளுமன்றத்தில் இரு அவைகளுக்கும் தலைவர் குடியரசுத் தலைவரே என உறுதிபடத் தெரிவித்துள்ளது. நாடாளுமன்ற அவைகளின் கூட்டத்தைக் கூட்டவும், ஒத்திவைக்கவும் அதிகாரம் படைத்தவர் குடியரசுத் தலைவரே ஆவார். நாடாளுமன்ற அவைகளில் விவாதித்து நிறைவேற்றப்படும் சட்ட மசோதாக்களுக்கு அவர் ஒப்புதல் அளித்தால்தான் அவை சட்டங்கள் ஆகும். அத்தகைய சிறப்பு அதிகாரங்கள் கொண்ட குடியரசுத் தலைவர் அவமதிக்கப்பட்டு இருக்கிறார். இது தனிப்பட்ட திரவுபதி முர்முவுக்கு ஏற்பட்ட அவமானம் அல்ல. இந்திய குடியாட்சித் தன்மைக்கே ஏற்பட்ட அவமானம் ஆகும். இந்திய அரசியலமைப்புக்கே ஏற்பட்ட அவமானம் ஆகும்.

மே 28 ஆம் தேதி நடைபெறும் இந்திய நாடாளுமன்றத்தின் புதிய கட்டடத் திறப்புவிழாவை புறக்கணிக்கப் போவதாக இந்தியாவில் உள்ள 19 முக்கிய எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன. இது அரசியல் இயக்கங்களின் அரசியல் முடிவல்ல. இந்திய மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் குடியாட்சித் தன்மையைக் காப்பாற்றும் முடிவுகள் ஆகும்.

இது தொடர்பாக தி.மு.க. காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள், திரிணாமூல் காங்கிரஸ், ஐக்கிய ஜனதா தளம், தேசியவாத காங்கிரஸ் கட்சி, ஆம் ஆத்மி கட்சி, சிவ சேனா (உத்தவ் தாக்கரே பிரிவு), சமாஜ்வாதி கட்சி, ராஷ்ட்ரீய ஜனதா தளம், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, ராஷ்ட்ரிய லோக் தளம், கேரள காங்கிரஸ், தேசிய மாநாட்டுக் கட்சி, புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி ஆகிய 19 கட்சிகள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளன. அதில், **"குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை முற்றிலுமாக ஒதுக்கி வைத்துவிட்டு, புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை தானே திறந்து வைக்கும் பிரதமர் நரேந்திர மோடியின் முடிவானது, குடியரசுத் தலைவருக்கு அவமானம் மட்டுமல்ல, நமது ஜனநாயகத்தின் மீதான நேரடித் தாக்குதலாகும்"** என்று சொல்லி இருக்கிறார்கள்.

"நாடாளுமன்றத்தில் இருந்து ஜனநாயகத்தின் ஆன்மா உறிஞ்சப்பட்டுவிட்ட நிலையில், அந்தப் புதிய கட்டடத்திற்கு மதிப்பு இல்லை" என்றும் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் அடிக்கல் நாட்டு விழா நடந்தது. அப்போதைய குடியரசுத் தலைவராக இருந்த மாண்புமிகு ராம்நாத் கோவிந்த் அவர்களை அழைக்கவில்லை. இப்போது திறப்பு விழாவில் இப்போதைய குடியரசுத் தலைவரையும் அழைக்கவில்லை.

**இது பா.ஜ.க.வின் அரசியல் சர்வாதிகாரத்தை மட்டுமல்ல, சனாதன சர்வாதிகாரத்தையும் காட்டுகிறது. இது அண்ணலே எதிர்பாராத சர்வாதிகாரம் ஆகும்!**

---

புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை

# குடியரசுத் தலைவர் மூலம் திறக்க உத்தரவிட வேண்டும்!

## உச்சநீதி மன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல்!

புதுடெல்லி, மே 27-

புதிய நாடாளுமன்ற கட்டடத்தை, குடியரசுத் தலைவர் மூலம் திறக்க, உத்தரவிடக் கோரி, உச்சநீதி மன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புதிய நாடாளுமன்றக் கட்டிடம், வரும் 28ம் தேதி திறக்கப்படுகிறது. இதனை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்க உள்ளார். பிரதமர் திறக்க எதிர்ப்புத் தெரிவித்து, திமுக,காங்கிரஸ் உள்ளிட்ட 19 எதிர்க்கட்சிகள் நாடாளுமன்ற திறப்பு விழாவைப் புறக்கணிப்பதாக கூட்டாக அறிவித்துள்ளன.

இந்தநிலையில் புதிய நாடாளுமன்ற கட்டடத்தை, குடியரசுத் தலைவர் மூலம் திறக்க மக்களவை செயலகத்துக்கு உத்தரவிடக் கோரி, ஜெய் சுகின் என்பவர் உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்துள்ளார்.

புதிய நாடாளுமன்றக் கட்டட திறப்பு விழாவிற்கு குடியரசுத் தலைவரை அழைக்காததன் காரணமாக, அரசியல் சட்டத்தை மக்களவைச் செயலகம் மீறி விட்டதாக மனுவில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்கு தலைவர் என்ற முறையில் புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை குடியரசுத் தலைவர் திறந்து வைப்பது தான் பொருத்தமாக இருக்கும் என்றும், அதுதான் மரபு என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.05.2023) சிங்கப்பூரில், சிங்கப்பூர் வாழ் தமிழர் முனைவர் சுப.திண்ணப்பன் அவர்கள் தமிழ் சமுதாயத்திற்கு ஆற்றிய சேவைகளைப் பாராட்டி அவருக்கு சால்வை அணிவித்து, புத்தகம் வழங்கி சிறப்பு செய்தார்.

---

தமிழ்நாட்டில் ஆவின் கூட்டுறவு இணையத்தைப் பாதிக்கும் வகையில்

# அமுல் நிறுவனம் பால் கொள்முதல் செய்வதை தடுத்திடுவீர்!

## ஒன்றிய உள்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, மே 27-**

**தமிழ்நாட்டில், ஆவின் பால் கொள்முதலை பாதிக்கும் வகையில் அமுல் நிறுவனம் செயல்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்திட வலியுறுத்தி, ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களுக்கு நேற்று முன்தினம் (25.5.2023) எழுதியுள்ள கடிதத்தில், கைரா மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (அமுல் நிறுவனம்) இதுநாள்வரையில் தங்களது தயாரிப்புகளை தமிழ்நாட்டில் உள்ள அவர்களுடைய விற்பனை நிலையங்கள் வாயிலாக மட்டுமே விற்பனை செய்து வந்த நிலையில், தற்போது தமிழ்நாட்டில், பால் உற்பத்தி செய்யப்படும் பகுதிகளில் அந்நிறுவனம் பால் கொள்முதல் செய்வதால் எழும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி, ஒன்றிய உள் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஆவின் பால் நிறுவனம் திறம்பட செயல்படுகிறது!

முதலமைச்சர் எழுதியுள்ள கடிதத்தில், பிற மாநிலங்களில் திறம்படச் செயல்படும் பால் கூட்டுறவு சங்கங்களைப் போலவே, தமிழ்நாட்டிலும் ஊரகப் பகுதிகளிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோரின் நலனுக்காக 1981 ஆம் ஆண்டு முதல், மூன்றடுக்கு பால் கூட்டுறவு அமைப்பு திறம்பட செயல்பட்டு வருவதாகவும், ஆவின் நிறுவனம் தலைமைக் கூட்டுறவு விற்பனை இணையமாக செயல்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில், ஆவின் கூட்டுறவு இணையத்தின் கீழ், 9,673 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும், அச்சங்கங்கள் நாளொன்றுக்கு 35 இலட்சம் லிட்டர் பாலினை 4.5 இலட்சம் உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்கின்றன என்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இதன் வாயிலாக, பால் உற்பத்தியாளர்களுக்கு ஆண்டு முழுவதும் இலாபகரமான மற்றும் சீரான விலை கூட்டுறவு சங்கங்களால் உறுதி செய்யப்படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், தமிழ்நாட்டில் ஆவின் நிறுவனம், பால் உற்பத்தியை அதிகரிக்கவும், நிலைநிறுத்தவும், கால்நடைத் தீவனம், தீவனம், தாது உப்புக் கலவை, கால்நடை சுகாதாரப் பராமரிப்பு மற்றும் கால்நடைகளுக்கான இனப்பெருக்க சேவைகளையும், இடுபொருட்களையும் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கி வருவதுடன், தரமான பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோருக்கு மிகக்குறைந்த விலையில் வழங்குவது உறுதி செய்யப்படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், கிராமப்புற பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலும், நுகர்வோரின் ஊட்டச் சத்தினைப் பூர்த்தி செய்வதிலும் ஆவின் நிறுவனம் முக்கியப் பங்காற்றுகிறது என்றும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

### சுய உதவிக்குழுக்கள் மூலம் பால் கொள்முதல் திட்டம்!

இந்தச் சூழ்நிலையில், அமுல் நிறுவனம், தமிழ்நாட்டின் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், குளிரூட்டும் மையங்கள் மற்றும் பதப்படுத்தும் நிலையத்தை நிறுவியுள்ளது குறித்தும், தமிழ்நாட்டில், கிருஷ்ணகிரி, தருமபுரி, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் மூலம் பால் கொள்முதல் செய்யத் திட்டமிட்டுள்ளது குறித்தும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில், மாநிலங்களுக்குள் ஒருவருக்கொருவர் பால் உற்பத்திப் பகுதியை மீறாமல், தங்களது கூட்டுறவுச் சங்கங்கள் செழிக்க பால் கொள்முதலை அனுமதிப்பது வழக்கமாக இருந்து வரும் நிலையில், அமுல் நிறுவனம் மேற்கொள்ளும் இத்தகைய எல்லை தாண்டிய கொள்முதல், 'வெண்மை புரட்சி' என்ற கொள்கைக்கு எதிராக அமைவதுடன், நாட்டில் பால் பற்றாக்குறை உள்ள சூழ்நிலையில், நுகர்வோர்களுக்கு மேலும் சிக்கல்களை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அமுல் நிறுவனத்தின் இத்தகைய செயல்பாடு, பல்லாண்டுகளாக கூட்டுறவு மனப்பான்மையுடன் செயல்பட்டு வரும் ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்திப் பகுதியில் பாதிப்பினை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

### அமுல் நிறுவனத்தால் போட்டி ஆரோக்கியமற்றதாகி விடும்!

அமுல் நிறுவனத்தின் இத்தகைய செயல், பால் மற்றும் பால் பொருட்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்யும் கூட்டுறவு சங்கங்களிடையே ஆரோக்கியமற்ற போட்டியை உருவாக்கிவிடும் என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், மாநிலங்களில் செயல்படும் கூட்டுறவு அமைப்புகள், பால்வளத் துறையின் வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கி வருவதுடன், பால் உற்பத்தியாளர்களை அத்தொழிலில் ஈடுபடுத்துவதற்கும், ஊக்குவிப்பதற்கும் உதவுவதாகவும், தன்னிச்சையான விலை உயர்விலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இந்த விவகாரத்தில், ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, தமிழ்நாட்டில் ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்திப் பகுதிகளில், அமுல் நிறுவனம் பால் கொள்முதல் செய்வதைத் தடுத்து நிறுத்திட வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தின் வாயிலாக வலியுறுத்தியுள்ளார்.

---

வளர்ச்சித் திட்டப் பணிகளைக் கண்காணிக்க - மேலும்

# 12 மாவட்டங்களுக்கு - புதிதாக கண்காணிப்பு அதிகாரிகள் நியமனம்!

## அரசாணை வெளியீடு!

சென்னை, மே 27-

வளர்ச்சித் திட்டப் பணிகளை கண்காணிக்க, மேலும் 12 மாவட்டங்களுக்கு புதிதாக கண்காணிப்பு அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களின் வளர்ச்சி, அரசுத் திட்டங்களின் செயல்பாடு உள்ளிட்டவற்றை கண்காணிக்க, கண்காணிப்பு அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர்.

சென்னையைத் தவிர்த்து, 25 மாவட்டங்களுக்கு ஏற்கெனவே கண்காணிப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் மேலும் 12 மாவட்டங்களுக்கு புதிதாக கண்காணிப்பு அதிகாரிகளை நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, அரியலூர் மாவட்டத்துக்கு சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை செயலர் அருண்ராய், கோவை மாவட்டத்துக்கு டிட்கோ நிர்வாக இயக்குநர் ஜெயஸ்ரீ முரளிதரன், கள்ளக்குறிச்சி மாவட்டத்துக்கு நெடுஞ்சாலைகள் துறை கூடுதல் தலைமைச் செயலர் பிரதீப் யாதவ் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல் காஞ்சிபுரம் மாவட்டத்துக்கு ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலர் செந்தில்குமாரும், நாகப்பட்டினம் மாவட்டத்துக்கு எரிசக்தித் துறைச் செயலர் ரமேஷ் சந்த் மீனாவும், நாமக்கல் மாவட்டத்துக்கு தகவல் தொழில் நுட்பவியல் துறைச் செயலர் குமரகுருபரனும் கண்காணிப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்ட கண்காணிப்பு அதிகாரியாக நில நிர்வாக ஆணையர் நாகராஜன், ராமநாதபுரம் மாவட்டத்துக்கு மனிதவள மேலாண்மைத் துறைச் செயலர் நந்தகுமார், ராணிப்பேட்டை மாவட்டத்துக்கு தேசிய சுகாதார இயக்க திட்ட இயக்குநர் ஷில்பா பிரபாகர் சதீஷ், சேலம் மாவட்டத்துக்கு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் நிர்வாக இயக்குநர் சங்கர், திருப்பத்தூர் மாவட்டத்துக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலர் ககன்தீப் சிங் பேடி, திருப்பூர் மாவட்டத்துக்கு டான்சி நிர்வாக இயக்குநர் விஜயகுமார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

---

# தமிழுக்கும் தமிழர்க்கும் தொண்டாற்றுவது நினைந்து நெஞ்சுக்குள் மகிழ்ந்தேன்!

## சிங்கப்பூரில் - தமிழறிஞர் பேராசிரியர் சுப.திண்ணப்பனுடனான சந்திப்பை அடுத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சிங்கப்பூர், மே 27-

சிங்கப்பூரில் - தமிழறிஞர் பேராசிரியர் சுப.திண்ணப்பன் அவர்களுடனான சந்திப்பையடுத்து வெளியிட்ட வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "தமிழுக்கும் தமிழர்க்கும் தொண்டாற்றுவது நினைந்து நெஞ்சுக்குள் மகிழ்ந்தேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ் போற்றும் சிங்கைவாழ் தமிழறிஞர் பேராசிரியர் சுப.திண்ணப்பன் அவர்களை இன்று சந்தித்தேன். என்னுடைய வாழ்க்கை வரலாற்று நூலான 'உங்களில் ஒருவன் முதல் பாகம்' நூலினை வழங்கி, அவரை வரவேற்றுப் போற்றினேன்.**

**தமிழும் தமிழர் நலமும் காக்கும் நமது அரசின் பணிகளைப் பாராட்டினார். தமிழ்ப் பண்பாட்டை உலகுக்குக் காட்சிப்படுத்தும் கீழடி அருங்காட்சியகம் சிறப்பாக அமைந்துள்ளதாகத் தெரிவித்த அவர், பொருநை அருங்காட்சியகமும் சிறப்புற அமைந்திட வாழ்த்தினார்.**

**சில கோரிக்கைகளை முன்வைத்தார். அதில் சிலவற்றை நமது அரசு ஏற்கனவே செயல்படுத்தி வருவதைத் தெரிவித்து, மற்ற கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருவோம் என உறுதியளித்தேன். முத்தமிழறிஞர் கலைஞரின் மகனான நான் சொன்னதை நிச்சயம் நிறைவேற்றுவேன் எனத் தான் நம்புவதாக அவர் தெரிவித்தார்.**

**அதே நம்பிக்கையைத்தான் நீங்களும் என் மீது கொண்டிருக்கிறீர்கள். அதனைக் காக்கும் என் பணிதான் தமிழுக்கும் தமிழர்க்கும் தொண்டாற்றுவது என்று நெஞ்சுக்குள் நினைந்து மகிழ்ந்தேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.